Puducherry / Tamil /18.10/ 27.06.2024

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள் 27.06.2024 வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

நாட்டில், அடுத்த மாதம் முதல் அமலாகவுள்ள, புதிய குற்றவியல் சட்டங்களால், தண்டனையைக் காட்டிலும், நீதிக்கு அதிக முன்னுரிமை கிடைக்கும் என்று, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

போட்டித் தேர்வுக்கான கேள்வித் தாள் கசிவு சம்பவங்களில், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க, அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார்.

ஓசூரில், 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

புதுச்சேரி பணிபுரியும் போதே உயிரிழந்த 6 அமுதசுரபி ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையிலான பணி ஆணைகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வழங்கினார்.

முர்மு – 1 (7)

நாட்டில் அடுத்த மாதம் 1ஆம் தேதி முதல் அமலாகவுள்ள, புதிய குற்றவியல் சட்டங்களால், நீதி, வழங்கும் நடைமுறைகள் துரிதமாகும் என்றும், தண்டனையை விட, நீதிக்கு அதிக முன்னுரிமை கிடைக்கும் என்றும் குடியரசு தலைவர் திருமதி திரெளபதி முர்மு கூறியுள்ளார். இன்று நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், புதிய குற்றவியல் சட்டங்கள், அரசியல் சாசன உணர்வுகளுக்கு ஏற்ற முறையில் அமைந்து இருப்பதாக கூறினார்.

முர்மு -2 (12)

போட்டித் தேர்வுக்கான கேள்வித் தாள் கசிவு சம்பவங்களில், நியாயமான முறையில் விசாரணை நடத்தவும், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், அரசு உறுதி பூண்டுள்ளதாக குடியரசு தலைவர் தெரிவித்தார். இத்தகைய சம்பவங்களைத் தவிர்க்க, கட்சி அரசியலைக் கடந்து, தேசிய அளவில் வலுவான நடவடிக்கை எடுத்தல் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக தெரிவித்த அவர், தேர்வு தொடர்பான அமைப்புகளிலும், அவற்றின் செயல்பாடுகள் மற்றும் தேர்வு நடைமுறைகளிலும், முக்கிய மாற்றங்களைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறினார். தேர்வு நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மையை முழுமையாக பராமரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

முர்மு -3(19)

உலகப் பொருளாதாரங்களின் பட்டியலில், இந்தியா கடந்த 10 ஆண்டுகளில், 11ஆவது இடத்தில் இருந்து, 5ஆவது இடத்திற்கு முன்னேறி இருப்பதாகவும், கொரோனா பெருந்தொற்று மற்றும், உலகின் பல்வேறு பிணக்குகளுக்கு இடையிலும், இந்தியா இந்த சாதனையை எட்டி இருப்பதாகவும் குடியரசு தலைவர் தமது உரையில் கூறினார். உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை உயர்த்த அரசு பாடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். சீர்திருத்தம்-செயல்பாடு-மாற்றம் என்னும் மனஉறுதியே, உலகின் மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியாவை மேம்படுத்தி இருப்பதாக அவர் கூறினார்.

தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உலகின் முன்னணி நாடாக இந்தியா மேம்பட்டு வருவதாகவும், இதனால் இளைஞர்களுக்கான வேலை மற்றும் சுயவேலை வாய்ப்புகள் அதிகரித்து வருவதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார். உற்பத்தி-சேவை-வேளாண்மை ஆகிய 3 துறைகளுக்கும் அரசு சமமான அளவில் முக்கியத்துவம் அளிப்பதாக அவர் கூறினார். இயற்கை விவசாயத்தை அரசு ஊக்குவித்து வருவதையும், விவசாயிகளுக்கான சேமிப்புக் கிடங்கு வசதிகளை, கூட்டுறவுத் துறை மூலம் உருவாக்க திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முர்மு -4 (15)

நாட்டில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான மின்னுற்பத்தி திறன் பலமடங்கு அதிகரித்து இருப்பதையும், பருவநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கான இலக்குகளை, இந்தியா குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே எட்டி வருவதையும் குடியரசு தலைவர் சுட்டிக் காட்டினார். நாட்டில் சாலை, ரயில்வே போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், இந்திய நகரங்களை, உலகின் மிகச்சிறந்த வாழ்விடங்களாக மேம்படுத்துவதே அரசின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அகமதாபாத்திற்கும், மும்பைக்கும் இடையில் அதிவேக ரயில் பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த அவர், இதே போல, நாட்டின் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களிலும் அதிவேக ரயில் பாதை அமைக்க, சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றார். வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடுகள் கடந்த 10 ஆண்டுகளில் 4 மடங்கு உயர்த்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முர்மு – 5 (9)

மகளிர் அதிகாரப் பங்கேற்பு குறித்து குடியரசு தலைவர் பேசுகையில், நாட்டில், பெண்கள் தலைமையிலான வளர்ச்சியின் யுகம் தொடங்கி இருப்பதாக கூறினார். நாடாளுமன்றத்திலும், மாநில சட்ட மன்றங்களிலும், பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க, நாரி சக்தி வந்தன் அபியான் சட்டம் இயற்றப்பட்டு இருப்பதையும், பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 4 கோடி வீடுகள் பெரும்பாலும் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார். அரசின் 3ஆவது பதவிக் காலத்தில் மேலும் 3 கோடி வீடுகளைக் கட்ட ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் தற்போது, உள்நாட்டிலேயே தயாரிக்கப் படுவதையும், நாட்டின் பாதுகாப்பு உற்பத்தி 21 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்து இருப்பதையும் குடியரசு தலைவர் சுட்டிக் காட்டினார். கடந்த 10 ஆண்டுகளில் 315 மருத்துவக் கல்லூரிகள் உட்பட பல்வேறு உயர்கல்வி நிறுவனங்கள் தொடக்கப் பட்டுள்ளதாகவும், டிஜிட்டல் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். தேசத்தை கட்டி எழுப்பும் பணிகளில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கான, மேரா யுவ பாரத் இயக்கத்தில் இதுவரை சுமார் 1 கோடியே 50 இளைஞர்கள் சேர்ந்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

முர்மு – 7 (12)

நாடாளுமன்றத்தில் விவாதங்கள் சுமூகமான முறையில் நடைபெற்றால் தான், முக்கிய முடிவுகளை மேற்கொள்ள முடியும் என்பதால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என குடியரசு தலைவர் கேட்டுக்கொண்டார். அரசின் கொள்கைகளை எதிர்ப்பதும், நாடாளுமன்ற அலுவல்களைத் தடைப்-படுத்துவதும், 2 வெவ்வேறு விஷயங்கள் என்பதை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். மனிதர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை காரணமாக இந்தியா தற்போது விஸ்வ பந்துவாக, உலகிற்கு புது நம்பிக்கை அளித்து வருவதாக, குடியரசு தலைவர் தெரிவித்தார். எந்த ஒரு நெருக்கடியிலும், முதலில் உதவிக்கு வரும் நாடாக இந்தியா திகழ்வதாகவும், தெற்குலக நாடுகளின் குரலாகவே இந்தியா மேம்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்டாலின் (10)

தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில், 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இன்று தமிழக சட்டப்பேரவையில் 110ஆவது விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில் அவர் இதை தெரிவித்தார். உத்தேச பன்னாட்டு விமான நிலையம், மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளுக்கும், தொழில் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமையும் என்று அவர் கூறினார். மதுரை மற்றும் கோவையைத் தொடர்ந்து, திருச்சியிலும், உலகத் தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும் என்றும் தமிழக முதலமைச்சர் அறிவித்தார்.

அமுதசுரபி (8)

புதுச்சேரி அமுதசுரபி கூட்டுறவு பண்டக சாலையில், பணிபுரியும் போதே உயிரிழந்த 6 ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையிலான பணி ஆணைகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வழங்கினார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமுதசுரபி நிர்வாகி திரு. இந்திர மோகன், மேலாண் இயக்குநர் திரு. அய்யப்பன், மேலாளர் திரு. சுரேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பயிற்சிப் பட்டறை (7)

புதுச்சேரி அரசின் கலை-பண்பாட்டுத் துறை சார்பில், நவீன நாடக, நடிப்பு முறைகள் மற்றும் பொம்மலாட்ட தொழில்நுட்பம் பற்றிய 3 நாள் பயிற்சிப் பட்டறை, இசிஆர் சாலையில் உள்ள காமராஜர் மணிமண்டபத்தில், இன்று தொடங்கியது. கலை-பண்பாட்டுத் துறை இயக்குநர் திரு. கலிய பெருமாள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக, முதலமைச்சரின் நாடாளுமன்றச் செயலர் திரு.ஜான்குமார் கலந்து கொண்டு, பயிற்சிப் பட்டறையைத் தொடங்கி வைத்தார்.

அத்வானி (5)

முதுபெரும் பிஜேபி தலைவர் திரு. எல்.கே. அத்வானி, வயது முதிர்வு காரணமாக பிரச்சனைகளால் நேற்று இரவு புதுடெல்லி, எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இன்று காலை மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். 96 வயதான அவர், மருத்துவமனையில் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்ததாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நிதி ஆயோக் (9)

மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச் சூழலின் ஒருங்கிணைந்த ஆரோக்கியம் பற்றிய, ஒரே சுகாதாரம் இயக்கத்தின் செயல்பாடுகளுக்கான சட்டச்சூழல் மதிப்பீடு குறித்து, புதுடெல்லியில் நடைபெறும் தேசிய ஆலோசனைக் கூட்டத்தை, நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி.கே. பால் இன்று தொடக்கி வைத்தார். மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை செயலர் டாக்டர் ராஜீவ் மணி, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை செயலர் திருமதி லீனா நந்தன், இந்தியாவிற்கான ஐ.நா. மேம்பாட்டுத் திட்டப் பிரதிநிதி திருமதி இசபெல் ஸ்சான் உள்ளிட்டோர், இந்த 2 நாள் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

உரை – கருத்து 1 (19)

நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில் இன்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய உரையை, எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தாரிக் அன்வர், நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில், குடியரசு தலைவரின் உரையில், வறுமை, வேலை வாய்ப்பின்மை, பணவீக்கம் போன்ற, நிஜமான பிரச்சனைகள் புறக்கணிக்கப்பட்டு, அரசின் சாதனைகள் பற்றி மட்டுமே பேசப்பட்டுள்ளதாக கூறினார்.

குடியரசு தலைவரின் உரையில் புதிதாக எதுவும் இல்லை என்றும், நீட் முறைகேடுகள் குறித்து உரையில் குறிப்பிடப் படவில்லை என்றும், மற்றொரு மூத்த காங்கிரஸ் தலைவர் திரு.பிரமோத் திவாரி குற்றம் சாட்டினார்.

சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் செய்தியாளர்களிடம் பேசுகையில், உலகின் 5ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா திகழ்வது பற்றி அரசு பெருமைப்படும் அதே வேளை, நாடெங்கிலும் வேலைவாய்ப்பின்மை அதிகரித்து விட்டதாகவும், விவசாயிகள் கடும் துன்பத்தில் இருப்பதாகவும் கூறினார். நடப்பு ஆட்சியில், குறிப்பிட்ட சில பிரிவினர் மட்டுமே, பயன் பெறுவதாகவும்

**உரை – கருத்து 2 (5)**

அவர் தெரிவித்தார். பாதுகாப்புத் துறையில் அரசு அமல்படுத்தி வரும் **அக்னி வீர்** திட்டத்தையும் அவர் குறை கூறினார்.

குடியரசு தலைவரின் நாடாளுமன்ற உரை, வெறும் **அரசு ஆவண**மாக மட்டுமே அமைந்து இருப்பதாக, திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி **மாஹுவா மோயித்ரா** குற்றம் சாட்டினார்.

வானிலை (10)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் இன்றைய தினம் கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 7ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம், wind worth எஸ்டேட்டில், 13 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

கிரிக்கெட் (9)

ஆடவர் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்திய நேரப்படி இன்று இரவு 8 மணிக்கு கயானாவில் நடைபெறும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோத உள்ளன. இத்தொடரில், இந்திய அணி இதுவரை எந்தப் போட்டியிலும், தோல்வியடையாமல், வலுவாக உள்ளது. சூப்பர்-8 சுற்றின் முடிவில் இந்திய அணி, புள்ளிப் பட்டியலில் முதல் இடத்திலும், இங்கிலாந்து அணி 2ஆவது இடத்திலும் உள்ளன. கயானாவில் இன்று மழைக்கு அதிக வாய்ப்புள்ள நிலையில், முடிவுகளைப் பெற ஏதுவாக இன்றைய போட்டிக்கு கூடுதலாக சில மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

***தலைப்புச் செய்திகள்***

நாட்டில், அடுத்த மாதம் முதல் அமலாகவுள்ள, புதிய குற்றவியல் சட்டங்களால், தண்டனையைக் காட்டிலும், நீதிக்கு அதிக முன்னுரிமை கிடைக்கும் என்று, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

போட்டித் தேர்வுக்கான **கேள்வித் தாள் கசிவு** சம்பவங்களில், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க, அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார்.

ஒசூரில், 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

புதுச்சேரி பணிபுரியும் போதே உயிரிழந்த 6 அமுதசுரபி ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையிலான பணி ஆணைகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/SM/VM